2018 ஜுன் 28]

பிற்பகல் 12–30

(ஆ) தமிழ்நாடு ஊராட்சிகள் (இரண்டாம் திருத்தச்) சட்டமுன்வடிவு, 2018

மாண்புமிகு பேரவைத் தலைவர்: 2018 ஆம் ஆண்டு தமிழ்நாடு ஊராட்சிகள் (இரண்டாம் திருத்தச்) சட்டமுன்வடிவு (சட்டமன்றப் பேரவை சட்டமுன்வடிவு எண் 29/2018), மாண்புமிகு நகராட்சி நிருவாகம் மற்றும் ஊரக வளர்ச்சி, சிறப்புத் திட்டங்கள் செயலாக்கத் துறை அமைச்சர் அவர்கள்.

***மாண்புமிகு திரு. எஸ்.பி. வேலுமணி:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே,

"2018 ஆம் ஆண்டு தமிழ்நாடு ஊராட்சிகள் (இரண்டாம் திருத்தச்) சட்டமுன்வடிவு (சட்டமன்றப் பேரவை சட்டமுன்வடிவு எண் 29/2018) @ஆய்வுக்கு எடுத்துக் கொள்ளப்பெற வேண்டும்"

எனக் கோருகிறேன்.

மாண்புமிகு பேரவைத் தலைவர்: நீங்கள் யாராவது பேசுகிறீர்களா? (குறுக்கீடு) மாண்புமிகு உறுப்பினர் திரு. சிவ.வீ. மெய்யநாதன் அவர்கள். சுருக்கமாகச் சொல்லுங்கள்.

திரு. சிவ.வீ. மெய்யநாதன்: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, 2016 ஆம் ஆண்டு அக்டோபர் மாதம் நடைபெற வேண்டிய உள்ளாட்சித் தேர்தல் இதுவரை நடத்தப்படாமல் உள்ளது. தமிழ்நாட்டில் 29 மாவட்ட ஊராட்சிகள், 385 ஊராட்சி ஒன்றியங்கள் மற்றும் 12,524 ஊராட்சிகளுக்கான தனி அலுவலர் பதவிக் காலத்தை நீட்டிப்பது என்பதை மக்களுக்கு இழைக்கப்படும் அநீதியாகக் கருதுகிறேன். குறிப்பாக, கிராமப்புறங்களில் இருக்கின்ற மக்கள் குடிதண்ணீர், சாலை வசதி, தெரு விளக்கு மற்றும் சுகாதார வசதி போன்ற வசதிகளைப் பெற முடியாமல் இன்றைக்குப் பல்வேறு துன்பங்களுக்கு ஆளாகியுள்ளார்கள். அதுமட்டுமல்லாமல், மத்திய அரசிடமிருந்து பெறப்படும் நிதியையும் பெற முடியாத சூழ்நிலை இன்றைக்குத் தமிழ்நாட்டில் ஏற்பட்டிருக்கிறது.

@ 28-6-2018ஆம் நாளிட்ட தமிழ்நாடு சிறப்பு அரசிதழில் வெளியிடப் பெற்றுள்ளது.

[திரு சிவ.வீ. மெய்யநாதன்] [2018 ஜூன் 28

1996 ஆம் ஆண்டு முத்தமிழ் அறிஞர், தலைவர் கலைஞர் அவர்கள் 33 சதவீத இட ஒதுக்கீட்டினைப் பெண்களுக்கு வழங்கி, உள்ளாட்சித் தேர்தலை வெற்றிகரமாக நடத்திக் காட்டினார்கள் என்பதைத் தெரிவித்துக்கொள்கின்றேன். (மேசையைத் தட்டும் ஒலி) மீண்டும், 2006 ஆம் ஆண்டு ஆட்சிப் பொறுப்பிற்கு வந்த தலைவர் கலைஞர் அவர்கள் உள்ளாட்சித் தேர்தலை நடத்தினார்கள். தமிழக சட்டமன்ற எதிர்க்கட்சித் தலைவர், கழகத்தின் செயல் தலைவர் மாண்புமிகு தளபதி அவர்கள் உள்ளாட்சித் துறை அமைச்சராகப் பொறுப்பேற்று, உள்ளாட்சித் துறையில் பல்வேறு சாதனைகளைப் படைத்தார்கள். பல்வேறு கூட்டுக் குடிநீர்த் திட்டங்கள், கிராமங்களுக்கு தார்ச் சாலைகள், குக்கிராமங்களுக்குக் குடிதண்ணீர், அண்ணா மறுமலர்ச்சித் திட்டம் போன்ற பல்வேறு சாதனைகளைப் படைத்து, உள்ளாட்சித் துறையில் ஒரு மறுமலர்ச்சியை ஏற்படுத்தினார்கள். அப்படிச் சிறப்பு வாய்ந்த உள்ளாட்சித் துறையின் நிலை இன்றைக்கு எப்படி இருக்கிறது என்பதைத் தாங்கள் எண்ணிப் பார்க்க வேண்டும்.

இங்கே கொடுக்கப்பட்டுள்ள விவர அறிக்கையில், 2011 ஆம் ஆண்டைய மக்கள்தொகைக் கணக்கெடுப்பின்படி, மாவட்ட ஊராட்சிகள், ஊராட்சி ஒன்றியங்களின் வார்டு பகுதிகள், அதேபோல, ஊராட்சிகளின் வார்டு பகுதிகளை மறுவரையறை செய்வதற்காக ஒரு குழு அமைக்கப்பட்டு, ஆணையம் அமைக்கப்பட்டு, அவற்றின் பணிகளெல்லாம் முடிவடைந்துள்ள நிலையில், பொது மக்களிடமிருந்தும், அரசியல் தலைவர்களிடமிருந்தும் பெறப்பட்ட சுமார் 8,000–க்கும் மேற்பட்ட மனுக்களை வைத்து, 20 சதவீதம் கூடுதலாகவோ அல்லது குறைவாகவோ உள்ள பகுதிகளாக தொகுதிகளை மறுவரையறை செய்கின்ற பணிகள் இருக்கின்றன என்று குறிப்பிட்டுச் சொல்லியிருக்கிறார்கள். இத்தகைய பணிகளெல்லாம் இன்றைய நவீன காலத்தில் மிக, மிகக் குறுகிய காலத்தில் செய்து முடிக்கக்கூடிய எளிதான பணிகள்தான். நான் கேள்விப்பட்டவரையில், தொகுதி மறுவரையறை செய்யும் பணிகள் முடிவுற்ற நிலையில் இருப்பதாக அறிகிறேன். அதனால் உள்ளாட்சித் தேர்தலை உடனடியாக நடத்த வேண்டும் என்று வலியுறுத்திக் கேட்டுக்கொள்கிறேன்.

மேலும், உச்ச நீதிமன்றத்திலும், உயர் நீதிமன்றத்திலும் வழக்குகள் இருப்பதாகச் சொல்லியிருக்கின்றீர்கள். அந்த வழக்குகளையெல்லாம் முடித்து, தமிழ்நாடு தேர்தல் ஆணையத்தின்

2018 ஜூன் 28] [திரு. சிவ.வீ. மெய்யநாதன்]

மூலமாக உள்ளாட்சித் தேர்தலை நடத்தினால், தமிழ்நாட்டில் 1 இலட்சத்திற்கும் அதிகமான உள்ளாட்சிப் பிரதிநிதிகள் தேர்ந்தெடுக்கப்பட்டு, மக்களுக்கு சேவை செய்யக்கூடிய வாய்ப்பு கிடைக்கும். இன்றைக்குக் கிராமப் பகுதிகளில் குடிதண்ணீர்ப் பற்றாக்குறையினால் மக்கள் அல்லல்படுகின்ற பல்வேறு சூழ்நிலைகளை நாம் பார்க்கின்றோம். உள்ளாட்சிப் பிரதிநிதிகள் இருந்தால் முறையாக இவையெல்லாம் நிறைவேற்றப்படுவது மட்டுமல்ல; மத்திய அரசிடமிருந்து உள்ளாட்சி அமைப்புகளுக்குத் தேவையான நிதியையும் நாம் பெற முடியும் என்பதையும் தங்களிடம் வலியுறுத்திக் கூற விரும்புகிறேன். தனி அலுவலர்கள் நியமிக்கப்பட்டிருந்தாலும், பல்வேறு ஊராட்சி ஒன்றியங்களில், அந்த ஊராட்சி ஒன்றியத்திற்கான பொது நிதியிலிருந்து செலவு செய்யத் தடை விதிக்கப்பட்டுள்ளதாக அறிகிறேன். அந்தத் தடையை நீக்கி, மக்களுக்குத் தேவையான பணிகளை மேற்கொள்ள வேண்டும். தமிழ்நாட்டில் உடனடியாக உள்ளாட்சித் தேர்தலை நடத்த வேண்டும் என்று கேட்டு, வாய்ப்புக்கு நன்றி கூறி விடைபெறுகிறேன். நன்றி.

மாண்புமிகு பேரவைத் தலைவர்: *மாண்புமிகு உறுப்பினர் திருமதி எஸ். விஜயதரணி அவர்கள்.*

திருமதி எஸ். விஜயதரணி: *மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, இந்தச் சட்டமுன்வடிவின் நோக்கமாக தனி அலுவலர்களின் காலத்தை நீட்டித்துக்கொண்டு போவதாகப் பார்க்கிறோம். குறிப்பாக, உள்ளாட்சி அமைப்புகள் இன்றைக்குச் செயல்பட்டுக் கொண்டிருந்தால், எந்த வகையில் மக்களுக்கு நன்மை பயக்கும் என்பது ஆளுங்கட்சியில் இருக்கின்ற எல்லோருக்கும் தெரிந்ததே. ஏற்கெனவே உள்ளாட்சித் தேர்தல்களில் அ.தி.மு.க. நிறைய தடவை வெற்றி பெற்றிருக்கிறது; தி.மு.க.–வும் வெற்றி பெற்றிருக்கிறது; காங்கிரஸ் கட்சியும் எங்கள் பகுதியில் நிறைய இடங்களில் வெற்றி பெற்றிருக்கிறது. (குறுக்கீடு) வெற்றி பெற்றது உண்மைதான்; என்னுடைய தொகுதியில் வெற்றி பெற்றிருக்கிறது. (குறுக்கீடு) உண்மையை ஒப்புக்கொள்ள வேண்டும். எங்கள் கட்சி எந்தெந்த இடங்களில் இருக்கிறது என்பதை நாங்கள் உணர்ந்திருக்கிறோம். அந்த அளவில், கட்சிக்கெல்லாம் அப்பாற்பட்டு, அரசியலுக்கெல்லாம் அப்பாற்பட்டு அதன் அவசியத்தை நாம் உணர வேண்டும். உள்ளாட்சி அமைப்பு என்பது ஒரு தன்னாட்சி அமைப்பாக விளங்கிட, எங்கள் கட்சியின்*

மறைந்த தலைவர், முன்னாள் பாரதப் பிரதமர் திரு. ராஜீவ் காந்தி அவர்களுடைய சீரிய சிந்தனையின் விளைவாக பஞ்சாயத்து ராஜ் சட்டம் உருவானது. அவர் இந்த நாட்டிற்கு அர்ப்பணித்த ஒரு பெரிய திட்டம் அது.

பிற்பகல் 12–35

இந்திய அரசமைப்புச் சட்டத்தின் 73, 74–வது கூறுகளில், இன்றைக்கு சுய அதிகாரத்தை வழங்கிய ஓர் அருமையான சட்டம் அது. அந்தச் சட்டத்தின் மூலமாக ஒவ்வொரு வார்டு கவுன்சிலரும், அடித்தட்டுப் பணிகளிலே ஈடுபட முடிந்தது. 50 பேருக்கு ஒரு தலைவர் என்ற வகையில் சிறப்பாக அந்த 50 குடும்பங்களுக்காக ஒருவர் செயல்படக்கூடிய தன்மையை அது உருவாக்கியது. அந்த முறை தொடர்ந்து செயல்பட்டால்தான், திட்டங்கள் மற்றும் சேவைகள் அடிமட்டத்தில் இருக்கக்கூடிய மக்களைச் சென்றடைய வாய்ப்பு இருக்கும். மக்கள் ஆதங்கத்தோடு உள்ளாட்சித் தேர்தல் வர வேண்டுமென்று எதிர்பார்த்துக் கொண்டிருக்கிறார்கள். அரசியல் கட்சிகள், அரசியல் தலைவர்களையும் தாண்டி சாமானிய மக்களும் இன்றைக்குத் தேர்தல் வர வேண்டுமென்று விரும்புகிறார்கள். மாண்புமிகு அமைச்சர் அவர்கள் உச்ச நீதிமன்ற, உயர் நீதிமன்ற வழக்குகளைப் பற்றிச் சொன்னார்கள். வழக்குகள் முடிவடைய வேண்டும்; அதிலே யாருக்கும் மாற்றுக் கருத்து இல்லை.

அதேநேரத்தில் தமிழ்நாடு தேர்தல் ஆணையம் பல்வேறு விஷயங்களை, சீர்திருத்தங்களை முன்வைத்திருக்கிறது. அதை நாங்கள் வரவேற்கிறோம்; சீர்திருத்தங்கள் வேண்டும். ஏதாவது ஒரு கட்டத்தில் சீர்திருத்தங்களை செய்துதான் ஆக வேண்டும். தேர்தல் ஆணையத்திற்கு அதற்குண்டான முழு அதிகாரம், உரிமைகள் வழங்கப்பட வேண்டும்; வழங்கியிருக்கிறீர்கள். அதில் மாற்றுக் கருத்து இல்லை. உள்ளாட்சித் தேர்தல் நடந்தால்தான் சாமானிய மக்களின் பிரச்சினைகளுக்குத் தீர்வு கிடைக்கும் என்ற காங்கிரஸ் கட்சியின் ஆழமான கருத்தை இந்த நேரத்தில் பதிவு செய்ய விரும்புகிறேன். உள்ளாட்சித் தேர்தலை விரைவில் நடத்தவேண்டும். அடுத்த round–லேயாவது நடத்துவதற்கு மாண்புமிகு அமைச்சர் அவர்கள் முயற்சிகளை எடுக்க வேண்டும். மாண்புமிகு முதலமைச்சர் அவர்களிடமும் இந்தக் கோரிக்கையை முன்வைக்கிறோம். ஆளுங்கட்சி உறுப்பினர்கள் அதிகம் இருப்பதால், இந்தச் சட்டமுன்வடிவை நீங்கள் நிறைவேற்றிவிடுவீர்கள். அதில்

2018 ஜூன் 28] [திருமதி எஸ். விஜயதரணி]

பிரச்சினை இல்லை. இருந்தாலும்கூட, உணர்வுரீதியாக நீங்கள் ஒரு முடிவெடுத்து, உள்ளாட்சித் தேர்தலை சீரிய முறையில் நடத்தி, மக்கள் பணியில் மக்கள் பிரதிநிதிகளை ஈடுபடுத்த நீங்கள் வாய்ப்புகளை உருவாக்க வேண்டுமென்று கேட்டுக்கொண்டு, காங்கிரஸ் கட்சியின் சார்பாக இந்தச் சட்டமுன்வடிவை நாங்கள் முழுமையாக எதிர்க்கிறோம் என்பதைப் பதிவு செய்கிறேன்.

மாண்புமிகு பேரவைத் தலைவர்: மாண்புமிகு நகராட்சி நிருவாகம் மற்றும் ஊரக வளர்ச்சி, சிறப்புத் திட்டங்கள் செயலாக்கத் துறை அமைச்சர் அவர்கள்.

மாண்புமிகு திரு. எஸ்.பி. வேலுமணி: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, நகராட்சியச் சட்டமுன்வடிவிற்குச் சொன்ன அதே பதில்தான் தனி அலுவலர் நியமனத்திற்கும். மாண்புமிகு உறுப்பினர் அவர்கள், 33 சதவிகித இட ஒதுக்கீட்டினை அவர்களது தலைவர் கொண்டு வந்ததாகக் கூறினார். 33 சதவிகித இட ஒதுக்கீடு கொண்டு வந்ததும், Cabinet–ல் வைத்து தீர்மானம் நிறைவேற்றியதும் மாண்புமிகு அம்மா அவர்கள்தான். அதேபோல், 50 சதவிகித இட ஒதுக்கீடு கொண்டு வந்ததும் மாண்புமிகு அம்மா அவர்கள்தான். (மேசையைத் தட்டும் ஒலி)

அதுமட்டுமல்லாமல், நீங்கள் சுலபமாக உள்ளாட்சித் தேர்தலை நடத்திவிடலாம் என்று சொல்கிறீர்கள். கிராமப் பஞ்சாயத்து வார்டுகள் மட்டும் ஒரு இலட்சத்துக்கும்மேல் இருக்கின்றன. அவற்றையெல்லாம் வரையறை செய்வது என்பது எவ்வளவு பெரிய வேலை? அது சுலபம் என்றால், 1996 ஆம் ஆண்டும், 2006 ஆம் ஆண்டும் உள்ளாட்சித் தேர்தலை நடத்தும்போது, நீங்கள் ஏன் அதைச் செய்யவில்லை? இது மிகப் பெரிய விஷயம். இதற்கு முன்னர் நாங்கள் தேர்தலை அறிவித்தபோது, இது மிகப் பெரிய வேலை; குறிப்பிட்ட காலத்திற்குள் செய்ய முடியாது என்பதால் விட்டுவிட்டோம். நீங்கள் நீதிமன்றத்திற்குப் போயிருக்கிறீர்கள்; இப்போது ஒரு வாய்ப்பு இருக்கிறது. அதனால் மாண்புமிகு அம்மா அவர்களின் அரசு சீர்திருத்தங்களை எடுத்து செய்து கொண்டிருக்கிறது; தேர்தல் ஆணையமும் செய்து கொண்டிருக்கிறது. இந்த நிலையில் எல்லாக் கிராமங்களுக்கும், நகரங்களுக்கும், மாநகராட்சிகளுக்கும் அனைத்து அடிப்படை வசதிகளையும் கூடுதலாகச் செய்து கொண்டிருக்கிறோம். மாண்புமிகு உறுப்பினர் அவர்கள் பேசும்போது, எதிர்க்கட்சித் தலைவர் அவர்கள் உள்ளாட்சித் துறை அமைச்சராக இருந்தபோது பல்வேறு குடிநீர்த்

திட்டங்களைக் கொண்டு வந்ததாகப் பேசினார்கள். மாண்புமிகு புரட்சித் தலைவி அம்மா அவர்கள் இருக்கும்போது, உங்கள் ஆட்சியில் செய்ததைவிட மூன்று மடங்கு அதிகமாகக் குடிநீர்த் திட்டங்களை நாங்கள் செயல்படுத்தியிருக்கிறோம்.

குடிநீர்த் திட்டப் பணிகளை எடுத்துக்கொண்டால், உங்கள் ஆட்சியில் ஐந்து வருடங்களில், ரூ.7,250 கோடியே 15 இலட்சம் அளவிற்குத்தான் செய்திருக்கிறீர்கள். மாண்புமிகு புரட்சித் தலைவி அம்மா அவர்களின் ஐந்து வருட கால ஆட்சியில் மட்டும் கிட்டத்தட்ட 21,988 கோடியே 21 இலட்சம் ரூபாய் அளவிற்கு அதாவது மூன்று மடங்கு அதிகமாக குடிநீர்த் திட்டப் பணிகளைச் செய்திருக்கிறோம். (மேசையைத் தட்டும் ஒலி) அதற்குப் பின்னர் புரட்சித் தலைவி அம்மா அவர்களின் ஆட்சி வந்ததற்குப்பிறகு, கடந்த இரண்டு ஆண்டுகளில் மட்டும், மாண்புமிகு புரட்சித் தலைவி அம்மா அவர்கள் ஆட்சியில் இருந்தபோதும், எங்கள் மாண்புமிகு முதலமைச்சர் அண்ணன் எடப்பாடியார் அவர்கள் ஆட்சியில் இருக்கும்போதும், அதைவிடக் கூடுதலாக குடிநீர்த் திட்டப் பணிகளைச் செய்திருக்கிறோம். கிட்டத்தட்ட 10,429 கோடி ரூபாயை குடிநீர்த் திட்டத்திற்காக ஒதுக்கியிருக்கிறார்கள். கடந்த 2 ஆண்டுகளிலும் அதிக நிதி ஒதுக்கப்பட்டிருக்கிறது. உள்ளாட்சித் துறையில் இன்றைக்குக் குடிநீர்த் திட்டப் பணிகளும், மற்ற எல்லாப் பணிகளும் சிறப்பான முறையில் நடந்து கொண்டிருக்கின்றன. எல்லாப் பணிகளும் தனி அலுவலர்மூலம் நடந்து வருகின்றன. ஆகவே, இந்தச் சட்டத்தை நீங்கள் நிறைவேற்றித் தர வேண்டும். தேர்தல் நிறுத்தப்பட்டதற்கு நாங்கள் காரணமல்ல. உயர் நீதிமன்றம் மற்றும் உச்ச நீதிமன்றத்தில் இருக்கும் வழக்குகள் முடிந்தால், தேர்தலை நடத்த நாங்கள் தயாராக இருக்கிறோம் என்பதை மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்கள் வாயிலாக மாண்புமிகு உறுப்பினர் அவர்களுக்குத் தெரிவித்துக்கொள்கிறேன்.

மாண்புமிகு பேரவைத் தலைவர்: மாண்புமிகு நகராட்சி நிருவாகம் மற்றும் ஊரக வளர்ச்சி, சிறப்புத் திட்டங்கள் செயலாக்கத் துறை அமைச்சர் அவர்களின் தீர்மானம் பேரவையின் முடிவிற்கு விடப்படுகிறது.

ஏற்போர் ‘ஆம்’ என்க. (ஆம்)

மறுப்போர் ‘இல்லை’ என்க. (இல்லை)

ஏற்போரே அதிகம் என்று கருதுகிறேன்.

ஏற்போரே அதிகம், தீர்மானம் நிறைவேறியது.

2018 ஜூன் 28] [பேரவைத் தலைவர்]

சட்டமுன்வடிவு பிரிவு வாரியாக ஆய்வுக்கு எடுத்துக்கொள்ளப்படுகிறது.

பிரிவு 2–ல் திருத்தங்கள் இல்லை.

பிரிவு 2 சட்டமுன்வடிவின் பகுதியாக இருக்க வேண்டும் என்னும் தீர்மானம் பேரவையின் முடிவிற்கு விடப்படுகிறது.

ஏற்போர் 'ஆம்' என்க. (ஆம்)

மறுப்போர் 'இல்லை' என்க. (இல்லை)

ஏற்போரே அதிகம் என்று கருதுகிறேன்.

ஏற்போரே அதிகம், தீர்மானம் நிறைவேறியது. (மேசையைத் தட்டும் ஒலி)

பிரிவு 1, முகப்புரை, நெடுந்தலைப்பு ஆகியவை சட்டமுன்வடிவின் பகுதியாக இருக்க வேண்டும் என்னும் தீர்மானம் பேரவையின் முடிவிற்கு விடப்படுகிறது.

ஏற்போர் 'ஆம்' என்க. (ஆம்)

மறுப்போர் 'இல்லை' என்க. (இல்லை)

ஏற்போரே அதிகம் என்று கருதுகிறேன்.

ஏற்போரே அதிகம், தீர்மானம் நிறைவேறியது.

மாண்புமிகு நகராட்சி நிருவாகம் மற்றும் ஊரக வளர்ச்சி, சிறப்புத் திட்டங்கள் செயலாக்கத் துறை அமைச்சர் அவர்கள்.

மாண்புமிகு திரு. எஸ்.பி. வேலுமணி: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே,

"2018 ஆம் ஆண்டு தமிழ்நாடு ஊராட்சிகள் (இரண்டாம் திருத்தச்) சட்டமுன்வடிவு (சட்டமன்றப் பேரவை சட்டமுன்வடிவு எண் 29/2018) நிறைவேற்றப்பெற வேண்டும்"

எனக் கோருகிறேன்.

மாண்புமிகு பேரவைத் தலைவர்: மாண்புமிகு நகராட்சி நிருவாகம் மற்றும் ஊரக வளர்ச்சி, சிறப்புத் திட்டங்கள் செயலாக்கத் துறை அமைச்சர் அவர்களின் தீர்மானம் பேரவையின் முடிவிற்கு விடப்படுகிறது.

[பேரவைத் தலைவர்] [2018 ஜூன் 28

ஏற்போர் ‘ஆம்’ என்க. (ஆம்)

மறுப்போர் ‘இல்லை’ என்க. (இல்லை)

ஏற்போரே அதிகம் என்று கருதுகிறேன்.

ஏற்போரே அதிகம், தீர்மானம் நிறைவேறியது. (மேசையைத் தட்டும் ஒலி)

சட்டமுன்வடிவு ஏற்கப்பட்டது.

பிற்பகல் 12–40

7. அரசினர் தீர்மானங்கள்—தொடர்ச்சி

(ஆ) மதிப்பீட்டுக் குழு உறுப்பினர்கள் தேர்தல்

மாண்புமிகு பேரவைத் தலைவர்: அரசினர் தீர்மானங்கள். குழுக்களுக்கான தேர்தல். மதிப்பீட்டுக் குழு. மதிப்பீட்டுக் குழுவிற்கு 16 உறுப்பினர்களைத் தேர்ந்தெடுத்தல். மாண்புமிகு துணை முதலமைச்சர் மற்றும் பேரவை முன்னவர் அவர்கள்.

***மாண்புமிகு திரு. ஓ. பன்னீர்செல்வம்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே,

“தமிழ்நாடு சட்டமன்றப் பேரவை விதி 195–ன்கீழ், 2018–2019 ஆம் ஆண்டிற்கான மதிப்பீட்டுக் குழுவின் உறுப்பினர்களாக இருக்கும்படி, பதினாறு உறுப்பினர்களை மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்கள் குறிப்பிடும் நாளன்று இப்பேரவை தேர்ந்தெடுக்கும்”

என்னும் தீர்மானத்தை மொழிகிறேன்.

மாண்புமிகு பேரவைத் தலைவர்: மாண்புமிகு துணை முதலமைச்சர் மற்றும் பேரவை முன்னவர் அவர்களின் தீர்மானம் பேரவையின் முடிவிற்கு விடப்படுகிறது.

ஏற்போர் ‘ஆம்’ என்க. (ஆம்)

மறுப்போர் ‘இல்லை’ என்க. (இல்லை)

ஏற்போரே அதிகம் என்று கருதுகிறேன்.

ஏற்போரே அதிகம், தீர்மானம் நிறைவேறியது. (மேசையைத் தட்டும் ஒலி)